தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண்:015715/டபிள்யு1/இ1/2021, நாள்:24.05.2022

1742

பொருள்: மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பு– பள்ளிப்பதிவேடுகள் அனைத்தும் கணினிமயமாக்குதல் மற்றும் தேவையற்ற பதிவேடுகள் நீக்குதல்– அரசாணை வெளியிடப்பட்டது நடைமுறைப்படுத்துதல்– சார்பு

பார்வை: அரசாணை நிலை எண்:154 பள்ளிக் கல்வித் (பக5(2)துறை) நாள்:15.11.2021.

---

2021–2022 ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களின் நிருவாகப் பணிச் சுமையைக் குறைப்பதற்காக பள்ளிப் பதிவேடுகளைக் கணினிமயமாக்குதல் சார்ந்து கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார் :

"தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் நிருவாகப் பணிப் பளுவை குறைக்கும் வண்ணம் பள்ளிகளில் பராமரிக்கப்படும் தேவையற்ற பதிவேடுகள் நீக்கப்படும். அவசியமான பதிவேடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS) வாயிலாக பெறத்தக்க வகையில் மாற்றி அமைக்கப்படும்".

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் பார்வையில் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

1. ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர்கள் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளைச் செய்து வருவதுடன் பல்வேறு நிருவாகப் பணிகளையும் செய்து வருகின்றனர். பள்ளிக்கல்வித் துறையில் பல்வேறு காலக்கட்டங்களில் தேவை கருதியும், நிருவாக நலனுக்காகவும், கற்றல்

கற்பித்தல் செயல்பாடுகளைத் தொடர் கவனிப்பு செய்வதற்காகவும் பல்வேறு பதிவேடுகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர்களின் நிருவாகப் பணிச்சுமை இயன்ற அளவு குறைக்கப்பட்டால் மட்டுமே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் அவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள இயலும்.

2. பள்ளிக்கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 100 வகையான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பதிவேடுகள் நாள்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் மற்றும் வருடத்திற்கு ஒரு முறை என்ற பல்வேறு காலமுறைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

3. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு முற்றிலும் கணினிமயமாக்கப்படவுள்ள 74 பதிவேடுகள், கணினித் தகவல்களைக் கொண்டு நேரடியாகப் பராமரிக்கப்பட வேண்டிய 7 பதிவேடுகள் ஆக மொத்தம் 81 பதிவேடுகளுக்கான தகவல்களை கல்வி மேலாண்மைத் தகவல் முறைமையிலிருந்தே (EMIS) நேரடியாகப் படியெடுத்துப் பயன்படுத்த இயலும். இதன்வாயிலாக தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் நிருவாகப் பணிப்பளு வெகுவாகக் குறைக்கப்படும். இதனால் அவர்கள் கற்றல் கற்பித்தல் பணிகளில் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக்கொள்ள இயலும். மேலும், கணினிமயமாக்கப்படவுள்ள பதிவேடுகளில் இருந்து தேவையான விவரங்களை உடனுக்குடன் பெற்று திட்டமிடல் மற்றும் நிருவாக மேம்பாடு குறித்த நடவடிக்கைகளை எடுக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

4. அரசாணையில் தெரிவித்துள்ள 81 பதிவேடுகளில் முதல்கட்டமாக இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 30 பதிவேடுகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. அரசாணையின்படி, 2022-23 கல்வியாண்டில் இருந்து வழக்கொழிந்த 11 பதிவேடுகளை நீக்கம் செய்துவிடவும், முதற்கட்டமாக கணினிமயமாக்கப்பட்டுள்ள 30 பதிவேடுகளை கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை (EMIS) வாயிலாக கணினியில் (இணையவழியில்) மட்டுமே பராமரித்திடவும் அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்குமாறு முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். படிப்படியாக ஜீன் மாதம் இறுதிக்குள் பிற அனைத்து பதிவேடுகளும் கணினிமயமாக்கப்படும் என்றும், அப்பதிவேடுகளையும் வரும் கல்வியாண்டிலிருந்து (2022-23) நேரடியாகப் பராமரிக்கத் தேவையில்லை என்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இணைப்பு:-

1). அரசாணை நிலை எண்.154

2). முதற்கட்டமாக கணினியில் பராமரிக்கப்படும்
30 பதிவேடுகளின் பட்டியல்

பள்ளிக்கல்வி ஆணையருக்காக
25/5/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

முதற்கட்டமாக கணினியில் பராமரிக்கப்படும் 30 பதிவேடுகளின் பட்டியல்

| வ.எண் | பதிவேடு | பராமரிக்கும் முறை | பள்ளி நிருவாகம் | பள்ளி வகை |
|---|---|---|---|---|
| 1 | Admission Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 2 | TC Issue Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 3 | Student Aadhar Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 4 | Student Summary Register - Community | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 5 | Student Summary Register - Religion | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 6 | Student Summary Register– Age | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 7 | Student Summary Register– Poverty Line | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 8 | CWSN Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 9 | Minority Language Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 10 | OoSC Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 11 | Nominal Roll Register | Online | Govt, Aided, Unaided | HS & HSS Only |
| 12 | Vocational Students Register | Online | Govt, Aided, Unaided | HSS Only |
| 13 | Establishment Register | Online | Govt, Aided, Unaided | PS, MS, HS, HSS |
| 14 | Staff Training Details Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 15 | Deputation Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 16 | Club Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 17 | Library Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 18 | Stock Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | School Donor Register (Wherever required) | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 20 | School Event Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 21 | Communication Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 22 | Petitions and Proceedings Register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 23 | Tour/Exposure register | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 24 | Auction Register (Wherever required) | Online | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 25 | Post and Email Register | Online and Offline | Govt and Aided | PS, MS, HS, HSS |
| 26 | Finance Register | Online | Govt | PS, MS, HS, HSS |
| 27 | Management Register | Online | Aided and Unaided | PS, MS, HS, HSS |
| 28 | Recognition Register | Online | Aided and Unaided | PS, MS, HS, HSS |
| 29 | RTE Student Register | Online | Unaided | PS, MS, HS, HSS |
| 30 | Reimbursement Register (RTE) | Online and Offline | Unaided | PS, MS, HS, HSS |

(PS - தொடக்கப்பள்ளி, MS - நடுநிலைப்பள்ளி,
HS - உயர்நிலைப்பள்ளி HSS - மேல்நிலைப்பள்ளி)

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

25/5/22

ந.க.எண்:- 1742/அ1/2022 - நாள்:- 30-05-2022

நகல் இணைப்புடன், தக்க நடவடிக்கைக்காக, மாவட்ட கல்வி அலுவலர், வட்டாரக்கல்வி அலுவலர்கள், மற்றும் அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

ஒப்பம்

முகஅ. வேலூர்.

30/05

பெறுநர்:

மாவட்ட கல்வி அலுவலர், வேலூர்.
வட்டாரக்கல்வி அலுவலர்கள் (8)
அனைத்து வகையான பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

30/5/22